சூரியவெவ பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சூரிவெவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்கல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,429,533 தொகை மிகையாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | நீதிமன்றத் தண்டப் பணம் பதிவேடு 2018 ஆண்டு முதல் நாளதுவரை ஆக்கப்பட்ட போது ஏற்பட்டிருந்த தவறு ஒன்று எனவும் எதிர்காலத்தில் பதிவேட்டினை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அடுத்த ஆண்டிற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 2,200,310 இற்கான கடன் தவணையின் கூட்டுப் பெறுமதி நடைமுறைப் பொறுப்புக்கள் என நிதி நிலைமைக் கூற்றில் காட்டியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்குகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,550,079 தொகைக்கான 1335 இருப்பு அலகுகள் இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணக் கணக்கின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இருப்பு விடயங்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | விரிவான தகவல்கள் இன்றி மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 882,000 தொகையினை பொறுப்பு ஒன்று என இனங்காணாமல் வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 1,273,204 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் இறுதிக் கணக்குகள் மூலம் குறைவாக பதிவு செய்யப்பட்டவற்றை சரி செய்வேன். | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது ரூபா 460,325 தொகைக்கான மூலதனச் சொத்துக்கள் நிர்மாணித்தல் செலவு மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 589,343 இற்கான தொங்கல் கணக்கு மீதியை சீராக்கல் மேற்கொள்ளாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தொங்கல் கணக்கு மீதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 261,241,986 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | விரிவான அட்டவணைகள் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | சேதனப் பசளை செயற்திட்டத்திற்கான வளை வேலி தயாரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த குழாய்களில் காணாமல் போன குழாய்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணையின் படி சபை உத்தியோகத்தர்களிடம் மற்றும் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 76,200 இற்கான நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினருக்கு நட்டத்தை செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் திருப்பிச் செலுத்தாவிடின் சட்ட நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2. நிதி மீளாய்வு

#### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,130,642 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,767,505 தொகையாக இருந்தது.

#### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுபையினால் 2016 ஆண்டு முதல் கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருக்காத சேமிப்பு கணக்கு ஒன்றில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 308,050 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | இந்த மீதியை நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | செயற்படாத கணக்குளை மூடிவிடுவதற்கு அல்லது முதலீடு ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| i. பெற வேண்டிய கடை வாடகை ரூபா 839,200 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 228,550 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்துக்கு அனுப்பட்டுள்ளது எனவும் மற்றும் மீதி நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. சூரியவெவ வாராந்த சந்தை மற்றும் மொத்தச் சந்தை தொடர்பாக பெற வேண்டிய ரூபா 55,910 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவைகளை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| iii. உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை 04 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான 11 கடைகளில் இருந்து ரூபா 492,672 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்திருக்காததுடன் நிலுவைத் தொகையில் ரூபா 292,592 தொகை 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்பட்ட மீதிகள் ஆகும். | நிலுவை ஒரே முறையில் செலுத்தப்படும் பணம் ரூபா 270,992 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்துக்கு அனுப்பட்டுள்ளது எனவும் நிலுவை மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| i. பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 24,500 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 290,075 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவை கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| **(இ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு | மாகாண வருமானத் திணைக்களத்தினால் சான்றுபடுத்தப்படாத 2013 | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 திகதியல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,528,532 தொகை காணப்பட்டது. | மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையொன்று நீதிமன்றத் தண்டப்பணப் பதிவேடில் அடங்கியிருந்தமையால் நிலுவை அதிகரித்துக் காணப்பட்டது எனவும் மற்றும் எதிர்காலத்தில் அந்த மீதிகளை பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நாளாந்த அலுவல்களை வசதிப்படுத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 2017 ஆம் ஆண்டு ரூபா 240,000 தொகை செலவு செய்து கொள்வனவு செய்திருந்த களஞ்சியம் ஆளுக்குரிய கோவைகள், வாகனங்கள் மற்றும் சுவடிகூட அலுவல்களுக்காக 04 கணினி மென்பொருள் முறைமைகளில் மீளாய்வாண்டு இறுதி வரை சுவடிகூட முறைமை மாத்திரம் செயற்பட்டிருந்தமையால் ஏனைய முறைமைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 180,000 சிக்கனமற்ற செலவொன்றாகியுள்ளது. | களஞ்சிய முறைமை தற்போது செயற்படு நிலையில் காணப்படுவதுடன் மற்றும் ஏனைய முறைமைகளில் குறைபாடுகளை சரி செய்து எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிறுவனத்துக்கு பொருந்தக்கூடிய ஆக்கபூர்வமான மென்பொருள் முறைமை ஒன்றினை கொள்வனவு செய்ய வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய காலம் முடிவடைந்திருந்த 65 வியாபார அலகுகளுக்காக பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிந்துரையை 2020 நவம்பர் 30 திகதி வரை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக பரிந்துரை வழங்கும் படி விண்ணப்பித்த போதிலும் பரிந்துரை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதுடன் 2021 ஆண்டிற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யும் போது குறிப்பிட்ட நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பரிந்துரையை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1993 ஜூன் 24 திகதிய அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 இன் 49 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதி முறைகளின் படி பெற்றுக் கொள்ள வேண்டிய சுற்றாடல் தாக்கங்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் அறிக்கைகள் காணப்படாத 13 வியாபார நிலையங்களுக்கு வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்கான சுற்றாடல் தாக்கங்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் அறிக்கைகளை பெற்றுக் கொண்டிருக்காத 19 வியாபார நிலையங்களுக்காக அவ்வறிக்கையை வழங்குவதற்கு அல்லது அறிக்கைகளை பெற்றுக் கொள்ளும்படி கைத்தொழில் உரிமையாளர்களை ஊக்குவிப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அதன் மூலம் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 83,752 தொகையாகும். | 19 வியாபார நிலையங்களில் தற்போது 05 வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது எனவும், 03 வியாபார நிலையங்களுக்கான முழுமையற்ற அனுமதிப் பத்திரத்தை முழுமையாக்கி குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், மீதியான 11 வியாபாரங்களில் 10 இற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி கடிதங்கள் அனுப்பட்டது எனவும், ஒரு வியாபாரத்திற்காக அனுமதிப் பத்திரம் வழங்க முடியாதது எனவும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வியாபாரிகளை அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி ஊக்குவிக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தாமல் முறையற்ற விதமாக குவிக்கப்படுவதுடன், பல வருட காலத்திற்கு முன்னர் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த சேதனப் பசளை உற்பத்தி குப்பை மீள்சுழற்சி செயற்திட்டம் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குப்பைகளை உக்கக் கூடியவை, உக்காதவை என வேறாக்கப்பட்ட போதிலும் குப்பை செயற்களம் திறந்தவெளியாக என்பதனால் வெளி நபர்களும் இந்த வளவில் குப்பைகளை போடுகிறார்கள் எனவும், செயற்திட்டத்திற்காக நிதியம் கிடைத்த பின்னர் மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பேன். | குப்பைகளை முறைப் பிரகாரம் போடுவதற்கும் மற்றும் மீள்சுழற்சி விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 2017 ஆகஸ்ட் 03 திகதி SU/HB/07/03/2015 இலக்கங் கொண்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றப்பட வேண்டிய சுற்றாடல் பரிந்துரைகள் அடங்கியுள்ள 06 நிபந்தனைகள் மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவேற்றியிருக்கவில்லை. | சேதனப் பசளை செயற்களம் திறந்த வெளி ஒன்றாக இருப்பதனால் காட்டு யானைகளின் மிரட்டல்களுக்கு உள்ளாவதுடன் பூமியை சுற்றி மின்வேலி தயாரிக்கும் போது எதிர்ப்புக்கள் ஏற்பட்டது எனவும் மற்றும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு தேசிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பப்பட்டள்ளது. | கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |